@QCChronicles @QueerChennaiChronicles @QCChronicles

குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
Queer Chennai Chronicles

# நந்தியார்வட்டம்

nantiyārvaṭṭam

**கதை**

**கிரீஷ்**

story: gireesh

**ஓவியம்**

**வைஜெயந்தி**

art: vaijayanthi


**வடிவமைப்பு: மௌலி**

layout: moulee

QueerChennaiChronicles.com







அவன் அருகே டேனியல் வந்து அமரந்திருந்தான். டேனியலிடம் பாட சம்மந்தமாக பேசலாம் என அவனுக்கு தோன்றியது. ஆனால் மெட்ரிகுலேஷனில் படிக்கும் டேனியலுக்கும் தமிழ் மீடியத்தில் படிக்கும் அவனுக்கும் படிப்பில் எதுவும் பேச இருக்கும் எனத் தோன்றவில்லை.


டேனியல் வந்த பிறகு அவனுக்கு டியூசன் செல்வது என்பதே பதட்டமாக இருந்தது. ஏதோ ஒரு துணியை மாட்டிக்கொண்டு டியூசன் சென்று கொண்டிருந்த அவன் டேனியல் வந்த பிறகு நல்ல நல்ல உடைகளை அடம் பிடித்து அணியத் தொடங்கினான். திருமணம், பண்டிகை போன்ற விசேஷங்களுக்கு அணிய வேண்டிய ஆடைகளை டியூசனுக்கு அணிவது பற்றி அம்மா திட்டிக் கொண்டே இருந்தார். டியூசன் சாரின் தங்கை ஒரு நாள் டேனியலைக் கூப்பிட்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

டியூசன் சாரின் தங்கை பேசிய அடுத்த நாள் முதல் டேனியல் டியூசன் வரும் போது மூன்று ஆம்பல் பூக்களைக் கொண்டுவரத் தொடங்கினான். டியூசன் வீட்டு வாசலில் வைக்கும் விளக்குக்கு பக்கத்தில் புதியதாக ஒரு உருளி முளைத்தது. அதில் நீர் நிரப்பி டேனியல் கொண்டுவரும் ஆம்பல் பூக்களை மிதக்க விட்டனர். டேனியல் சேர்ந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்ட நிலையில் டேனியலிடம் பேச விரும்பி டியூசன் முடிந்து கிளம்பிய ஒரு நாள் பேசினான்.

3







அடுத்தடுத்த நாட்களும் அவன் டேனியலுடன் எதுவும் பேசவில்லை. டியூசனுக்கு வரும் ஆம்பல் பூக்களை மட்டும் வெறுப்பாக பார்த்துக் கொண்டிருந்தான்.

~*~*~

அரையாண்டுத் தேர்வுகள் முடிந்து கிறுஸ்துமஸ் விடுமுறைவிடப் பட்டிருந்தது. அவனுக்கு டேனியலைப் பார்க்க முடியாதது வெப்ராளமாக இருந்தது. ஜனவரி இரண்டாம் தேதி பள்ளி திறக்கும் போது தான் பார்க்க முடியும். எதுவும் செய்யாமல் வெட்டியாக இருந்தான். அவன் வளரந்து வந்த கப்பீசுக்கு ரவை கூட போடுவதில்லை.

7









10

அவனுக்கு வெகுநாட்களாக அந்த மலைக்கு செல்ல வேண்டும் போல இருந்தது. ஊரிலிருக்கும் உருப்படாத இளைஞர்கள் குடிக்கவும் சிகிரெட் பிடிக்கவும் செல்லும் அந்த மலைக்கு அவன் போவது வீட்டுக்கு தெரிந்தால் கொலையே நடக்கும். ஆனால் டேனியல் கேட்கும்போது மறுக்க முடியவில்லை.

“செரி. நான் பாலக் குடுத்துட்டு வர்றேன்” விளையாடப் போவதாக வீட்டில் சொல்லிவிட்டு வந்து டேனியலின் சைக்கிளின் முன்னால் ஏறினான். டேனியலின் உயரத்திற்கு அந்த சைக்கிளும் சிறியதாக இருந்தது. வளைவுகளில் திரும்பும்போது டேனியலின் கைகளுக்குள் அடங்கிவிட்டது போல் தோன்றியது.


டேனியலின் வீட்டில் சென்று சைக்கிளை நிறுத்திவிட்டு கத்தியும், சாக்கும், ஒரு தூக்கு வாளியில் குடிக்கத் தண்ணீரும் எடுத்துக் கொண்டு இருவரும் நடக்கத் தொடங்கினர். டேனியல் எதை எதையோ கேட்டுக் கொண்டும் இவனை கிண்டல் செய்து கொண்டும் வந்து கொண்டிருந்தான். இவன் பெரிதாக எதுவும் பதில் எல்லாம் சொல்லவில்லை. அமைதியாக நடந்து கொண்டிருந்தான். அவனுக்கு ஏனோ பயமாக இருந்தது.








இருவரும் குளத்துக்கு சென்றபோது குளம் காலியாக இருந்தது.
டேனியல் சட்டையைக் கழற்றி விட்டு பெர்முடாசுடன் தண்ணீரில் குதித்து நீந்தத் தொடங்கினான். டேனியல் குளிப்பதையே பார்த்துக் கொண்டிருந்தான்.
13


14
குளித்து விட்டு டவலை  வைத்து தலைதுடைத்துக் கொண்டே நடந்த டேனியல் திடீரென எதையோ யோசித்தவனாக நின்றான்.
“ஒரு நிமிஷம் இருக்கியா? நான் என் பனியன குளத்துக்கிட்டயே வச்சுட்டேன். போய் எடுத்துட்டு வரேன்”
பதிலுக்குக் கூட காத்திருக்காமல் டேனியல் ஓடினான்.


அந்த சமயத்தில் கரி அள்ளிக் கொண்டு கூட்ஸ் வண்டி ஒன்று அவனைக் கடந்து போனது.
அவன் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். வண்டியின் சத்தம்  குறைந்ததும் பின்னாலிருந்து  சத்தம் கேட்டது..
“கண்ண மூடு. ஒண்ட ஒண்ணு காட்டணும்”
அவன் கண்களை மூடி நின்றான்.
15



“இப்போ தொற?”
கண்களைத் திறந்தவன் முன்பு கைகள் நிறைய ஊதாவும், நீலமும் கலந்த ஆம்பல் பூக்களை நீட்டியபடி டேனியல் நின்று கொண்டிருந்தான்.
அவன் கண்கள் வழக்கம் போல் சிரித்துக் கொண்டிருந்தன.
ஆம்பல் பூக்களில் இருந்து நந்தியார்வட்டப் பூக்களின் வாசனை வந்து கொண்டிருந்தது.